# THE ENVIRONMENT AND CHAOS THEORY: AN ISLAMIC OBSERVATION

**S.M. Ayoob**[1]

Correspondence: ayoobsm@seu.ac.lk

**ABSTRACT**

Every phenomenon that occurs in the world has the interconnection between each other, whether it is inconspicuous or not. An event which happens in an appropriate time would have the ability to create considerable changes in another. The chaos theory emphasises that the small amount of air caused by the flapping butterfly wings would gain energy to create a massive storm in another place which means the slightest change in one phenomenon can lead to excellent outcomes. This research is aimed to analyse the views of Islam on Environment by absorbing the above-mentioned facts. This research describes the environment based on the Islamic fundamentals and books of scholars as secondary sources of data. Islam views the environment in a friendly manner by giving the status of the living organism, focusing that all components of the environment worship the God like human beings and the environment is considered as one of the members in the family structure. Moreover, Islam enlightens the people to carry out the activities whether it may be a small one which could be useful to the environment and on the other hand it emphasises to prohibit the activities which are harmful to the environment.

**Keywords:** environment, chaos theory, ecological crisis

## சூழலும் ஒழுங்கின்மைக் கோட்பாடும்: ஓர் இஸ்லாமிய அவதானம்

கலாநிதி எஸ்.எம். அய்யூப்,
தலைவர், சமூகவியல் துறை
சமூகவியல் முதுநிலை விரிவுரையாளர்
கலை கலாசார பீடம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
0094769643899, மின்னஞ்சல்: ayoobsm@seu.ac.lk, ayoobsm2004@gmail.com

***ஆய்வுச் சுருக்கம்***

ஒழுங்கற்ற ஒரு அமைப்பிலோ, ஒரு தொடர் செயற்பாட்டிலோ ஒரு ஒழுங்கைத் தேடும் இயலைப் பற்றி விபரிப்பதே ஒழுங்கின்மைக் கோட்பாட்டின் (Chaos theory) மையமாகும் (சிவம், 2006). தொடர்பற்ற நிகழ்வுகளிடையே தொடர்புகள் உள்ளன என்றும் ஒரு சிறிய நிகழ்வு கூட பாரிய மாற்றங்களை கொண்டுவரும் ஆற்றல் மிக்கது என்றும் இக்கோட்பாடு கூறுகின்றது. ஒழுங்கின்மைக் கோட்பாட்டின் கருத்துகளை இஸ்லாம் சூழலோடு சம்பந்தப்படுத்தி எவ்வாறு நோக்குகின்றது என்பதனை விபரிப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். இஸ்லாமிய மூலாதாரங்களையும், அறிஞர்களது நூற்களையும் இரண்டாந்தர தரவுகளாகப் பயன்படுத்தி இவ்வாய்வு இஸ்லாத்தின் பார்வைகளை விபரிக்கின்றது. சூழலுக்கு உயிர்ப் பெறுமானம் கொடுத்தல், மனிதனைப் போல் சூழலில் உள்ளவையும் இறைவனை துதிப்பதாக நோக்கல், சூழலை இறைவனின் குடும்ப அங்கமாகப் பார்த்தல் என நோக்குவதன் வழி சூழலை சகோதரத்துவக் கண்கொண்டு பார்க்கின்றது இஸ்லாம். மேலும் சிறிய செயலாக இருந்தாலும்

[1] Department of Sociology, South Eastern University of Sri Lanka.

சூழலை அது வளப்படுத்துமானால் செய்யும் படியும் நலிவடையச் செய்யுமானால் தவிர்ந்து கொள்ளும் படியும் இஸ்லாம் போதிக்கின்றுத.

**திறவுச் சொற்கள்**: சூழல், ஒழுங்கின்னைக் கோட்பாடு, சூழல் பிரச்சினை

**அறிமுகம்**

வாழும் ஒரு உயிரினத்தைச் (Living organism) சுற்றிக் காணப்படும் உயிருள்ள (Biotic) மற்றும் உயிரற்ற (Abiotic) கூறுகளின் கூட்டுமொத்தமே சூழல் (Environment) எனும் சொல்லால் குறிக்கப்படுகின்றது. உயிரியல் கூறுகளில் தாவரங்கள், விலங்குகள், நுண்ணுயிர்கள் போன்றனவும், உயிரற்ற கூறுகளில் நிலம், நீர், ஆகாயம், சூரிய ஒளி, காற்று போன்றனவும் அடங்கும்.

ஒழுங்கற்ற ஒரு அமைப்பிலோ அல்லது தொடர் செயற்பாட்டிலோ ஒரு ஒழுங்கைத் தேடும் முயற்சியே ஒழுங்கின்மைக் கோட்பாடாகும் (சிவம், 2006). சமுதாயத்தில் நடக்கும் நிகழ்வுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றவையாக வெளிப்படையாகத் தோன்றினாலும் அவை உள்ளார்ந்த தொடர்புகளைக் கொண்டவை. பாரிஸ் நகரத்தில் ஒரு பட்டாம்பூச்சி தன்னுடைய சிறகுகளை படபடத்துக் கொள்வதன் விளைவாக அமெரிக்காவில் ஒரு ஹரிக்கேன் புயல் உருவாகக் கூடும் என்பது ஒழுங்கின்மைக் கோட்பாட்டை விளக்கும் பட்டாம்பூச்சி விளைவு (Butterfly effect) கோட்பாடாகும். இதன் அர்த்தம் எல்லாப் பட்டாம்பூச்சிகளின் படபடப்பும் புயலை உருவாக்கும் என்பதல்ல. தக்க தருணத்தில் ஏற்படும் ஒரு நிகழ்வு அல்லது அந்தக் கணத்தில் செய்யப்படும் ஒரு காரியம் எதிர்காலத்தில் பாரிய மாற்றங்களை மற்றும் விளைவுகளை ஏற்படுத்தும் சக்தியைப் பெறுகின்றது என்பதே இக்கோட்பாட்டின் சாரமாகும் (ஆக்ரேயா, 2019).

எந்த செயலையும் சிறிய செயல் என விட்டுவிட முடியாது. ஒரு சிறிய தீப்பொறி மிகப்பெரிய வனாந்திரத்தை அழித்து விடுகின்றது. ஒவ்வொரு துளியாக சேர்ந்து தான் வெள்ளம் பிரவாகமெடுத்து ஓடுகின்றது. சிறிய செயல்கள் கூட பாரிய பல மாற்றங்களைத் தோற்றுவித்து விடுகின்றன.

புரிந்து கொள்வதற்கு கடினமான, கண்களுக்கு தோன்றாத ஒழுங்கற்ற தொடர்புகள் நிகழ்வுகளுக்கிடையே காணப்படுவதன் காரணமாகவே சிறிய நிகழ்வுகள் கூட சில நேரம் எதிர்பாராத மாற்றங்களை இந்தப் பூமிப்பரப்பில் கொண்டு வருகின்றன. விவசாயிகள் வயலை உழத் தொடங்கும் போது கொக்குகள் அங்கே குழுமி விடுகின்றன. சுற்றிவர கல் வேலிகள் கட்டப்பட்டிருந்தும் நடப்பட்ட மரத்தின் இலைகளை உண்பதற்கு புழுக்கள் வந்துவிடுகின்றன. வெளிப்படையாகப் பார்க்கும் போது உழவுதல், கொக்கு வந்து விடுதல், மரம் நடுதல், புழுக்கள் வருதல் போன்றவை தனித்தனி நிகழ்வுகள். ஆனால் மொத்தமாகப் பார்க்கும் போது அவை பிரபஞ்ச நிகழ்வுகள், ஒன்றுக்கொன்று தொடர்புள்ள நிகழ்வுகள்.

இயற்கையை மனிதன் வென்றுவிட்டான் எனக் கூறும் பொழுது இயற்கை எப்போது மனிதனுக்கு எதிரியாக இருந்தது எனும் கேள்வி எழுகின்றது. இயற்கையும், இந்த பிரபஞ்சமும் மனிதனும்

வெவ்வேறான படைப்புகள் அல்ல. ஒரு உடலின் வெவ்வேறு உறுப்புகள். இவை வேறு வேறாக துருத்திக் கொண்டிருந்த போதிலும் உள்ளார்ந்த தொடர்பை அவை கொண்டிருக்கின்றன. கண்ணுக்குத் தெரியாத தொடர்புகள் அவற்றினிடையே பிணைக்கப்பட்டிருக்கின்றன. 'நட்சத்திரம் எங்கோ வானத்தில் இருக்கின்றது. பூவோ பூமியில். இந்த இரண்டிற்கும் ஏதாவது தொடர்பு இருக்க முடியுமா? தொடர்பை உணர்கின்றவன் ஞானியாகிவிடுகிறான். பிரமாண்டமான பிரபஞ்சத்தின் அங்கங்கள் தாமே இவை. ஒரே உடலின் உறுப்புகள். இதைத்தான் பிரான்ஸிஸ் தாம்சன் எனும் தத்துவக் கவிஞன் **ஒரு சிறு பூவை நீ அசைத்தால் ஒரு நட்சத்திரம் அணைந்து போகலாம்** எனக் குறிப்பிடுகின்றார்' (அப்துல் றகுமான், 1995).

இப்பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் பரஸ்பரம் ஒன்றோடொன்று தொடர்புற்றும் பின்னிப்பிணைந்தும் காணப்படுகின்றது எனும் உண்மை அறிவியல் அடிப்படையில் பெறப்பட்டதொரு உண்மையாகும். இந்த விதியினடிப்படையில் இயற்கைச் சூழலானது எந்த ஒரு பகுதியும் ஏனைய பகுதிகளிலிருந்து பிரிக்க முடியாத வகையில் ஒரு கட்டுக் கோப்பில் இணைந்துள்ளதாக சூழலியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். இயற்கைச் சூழலின் பிரிக்க முடியாத அங்கமாகவே மனிதனும் காணப்படுகின்றான். சூழலின் அங்கமான மனிதன் இயற்கைச் சூழலிலிருந்து அந்நியப்பட்டு விலகும் போது சூழல் சமநிலை மற்றும் ஒருங்கிணைப்பு சீர்குலைந்து சூழல் பிரச்சினை (Ecological crisis) தோற்றம் பெறுகின்றது (சுக்ரி, 1995). எனவே தான் சூழலின் அங்கம் எனும் உண்மையும் சூழல் தனது சகோதரன் எனும் உண்மையும் மனிதனுக்கு மறந்து போகும் போது சூழலுக்கு எதிராக தொழிற்படுகின்றான்.

இயற்கையையும், பிரபஞ்சத்தையும் சகோதர வாஞ்சையுடன் பார்க்கும் பார்வை அவற்றின் மீது அன்பு காட்டுவதற்கும், நேசிப்பதற்கும், அழிவிலிருந்து பாதுகாப்பதற்கும் கை கொடுக்கின்றது. இஸ்லாம் சூழலை எதிரியாக அல்லாமல் சகோதர வாஞ்சையுடன் பார்க்கின்றது. அவற்றை பின்வருமாறு நோக்கலாம்.

### சூழல் குறித்த இஸ்லாமிய பார்வை

#### *01. உயிரற்ற பொருட்களை உயிருள்ள பொருட்களாகப் பார்த்தல்*

இஸ்லாம் உயிரற்ற பொருட்களுக்கும் மனிதப் பெறுமானம் கொடுத்துப் பார்க்கின்றது. ஒரு முறை முஹம்மத் நபி (ஸல்) கைபர் போரிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த போது உஹுத் மலை கண்களுக்குப் புலப்படுகின்றது. அப்போது 'இந்த உஹுத் மலை எங்களை விரும்புகின்றது. நாமும் அதனை விரும்புகின்றோம்' என கூறினார்கள். பாறாங்கற்களுக்கும் இதயம் வைத்துப் பார்க்கும் இந்தப் பார்வையே இஸ்லாத்தின் சிறப்பம்சமாகும்.

இன்னுமொரு தடவை உஹுத் மலையில் நடுக்கம் ஏற்பட்ட போது 'உஹுதே அமைதியாக இருப்பாயாக' என அம்மலையை விழித்து நபியவர்கள் பேசினார்கள். மனிதர்களோடு

உரையாடுவது போன்று மலைகளோடு பேசுவதை விட இயற்கையை நேசிப்பதற்கு வேறொரு உதாரணம் தேவையில்லை.

மற்றொரு முறை நபியவர்கள் ஈச்சமரக் குற்றிகளால் புதிதாக செய்யப்பட்ட பிரச்சார மேடையில் ஏறிய போது ஒரு அழுகைச் சத்தத்தை கேட்கின்றார்கள். பழைய பிரச்சார மேடையிலிருந்து புறமொதுக்கப்பட்ட ஈச்சங்குற்றியின் அழுகைச் சத்தமென்பது பின்னர்தான் தெரியவருகின்றது. அப்போது பழைய ஈச்சங் குற்றியையும் புதிய ஈச்சங் குற்றிகளோடு சேர்த்துக் கொண்ட போது அந்த அழுகைச் சத்தம் நின்று போனதாக இஸ்லாமிய மரபில் ஒரு கதையுண்டு.

சம்பவங்களுடன் சம்பந்தப்படும் மலைக்கல்லும் ஈச்சங்குற்றியும் உயிரற்ற பொருட்கள். மலைக்கல் அன்போடும், ஈச்சங்குற்றி அழுகையோடும் பிணைக்கப்பட்டு உயிர்ப் பெறுமானம் கொடுக்கப்படுகின்றது. இயற்கையை நேசிப்பதில் மிக உன்னதமான நிலை இதுவாகும்.

***02. உயிரற்றவையையும் உயிருள்ளவை போல் அல்லாஹ்வை சுஜூது (prostration) மற்றும் தஸ்பீஹ் (Glorification) செய்வதாக கொள்ளல்.***

வானங்கள் பூமியில் உள்ளவை அனைத்தும் சுஜூது (prostration) அதாவது சிரம்பணிந்து அல்லாஹ்வை வணங்குகின்றன. அதேபோல் அல்லாஹ்வை தஸ்பீஹ் அதாவது மகிமை (Glorification) செய்கின்றன என்பது அல்குர்ஆனின் கருத்தாகும்.

அவனது புகழைக் கொண்டு இடியும், அவனுடைய அச்சத்தினால் வானவர்களும் புகழ்ந்து துதிக்கின்றனர் (Glorification) (அல்குர்ஆன், 13:13).

அல்லாஹ் படைத்துள்ளவற்றை அவர்கள் பார்க்கவில்லையா? அவற்றின் நிழல்கள் வலமும் இடமும் சாய்ந்து, அல்லாஹ்வுக்கு சுஜூது செய்து அடிபணிகின்றன. வானங்கள் பூமியில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் மலக்குகளும் அல்லாஹ்வுக்கு சுஜூது செய்கின்றன. அவர்கள் பெருமையடிப்பதில்லை (அல்குர்ஆன், 16: 48, 49).

வானங்கள் பூமியில் உள்ள அனைத்தும் அல்லாஹ்வுக்கு தஸ்பீஹ் செய்கின்றன. அவன் அறிந்தவன், கண்ணியமானவன் (அல்குர்ஆன், 59: 01).

வானங்களிலுள்ளவர்களும், பூமியிலுள்ளவர்களும் சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும், மலைகளும், மரங்களும், பிராணிகளும், மனிதர்களில் பெரும்பாலானவர்களும் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு ஸுஜூது செய்கின்றன என்பதனை நீர் பார்க்கவில்லையா? (அல்குர்ஆன், 22:18).

வானங்களிலும் பூமியிலும் இருப்பவையெல்லாம், விரும்பியோ விரும்பாமலோ அல்லாஹ்வுக்கே சுஜூது செய்கின்றன. அவற்றின் நிழல்களும் காலையிலும் மாலையிலும் அவ்வாறே செய்கின்றன (அல்குர்ஆன், 13: 15).

நட்சத்திரங்களும், மரங்களும் அவனுக்கே சுஜூது செய்கின்றன (அல்குர்ஆன், 55:6).

வானம், பூமி, அவற்றிலுள்ளவை, பறவைகள், இடி போன்ற அத்தனையும் இறைவனை மனிதர்கள் துதிப்பது போன்று துதிப்பதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. மனிதனைப் போன்றே இயற்கையும் உயிர் வாழ்கின்றது. இயற்கை என்பது வெறுமனே சடமன்று. அதற்கு பண்புத் தன்மையும் (Qualitative value) ஜீவனும் உண்டு என்பது இஸ்லாத்தின் கருத்தாகும் (சுக்ரி, 1995).

தன்னைப் போலவே சூழலில் உள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்களும் இறைவனை சிரம் பணிவதாக, புகழ் பாடுவதாக மனிதனை எண்ணச் செய்வதன் வழி சூழலுடன் நேசம் கொள்ள வைக்கின்றது இஸ்லாம்.

***03.இறைவனின் குடும்பம்***

மனிதன் எனும் கௌரவத்தைத் தாண்டி இறைவனின் குடும்பம் எனும் கௌரவத்தை படைப்புகள் அனைத்திற்கும் கொடுக்கின்றது இஸ்லாம். ‘படைப்புகள் அனைத்தும் அல்லாஹ்வின் குடும்பம்’ என்பது முஹம்மத் (ஸல்) அவர்களின் வார்த்தையாகும்.

ஒரு மனிதன் தன் வாழ்நாளில் செய்யும் ஒரு காரியம் காலங்களைத் தாண்டி எதிர்பாராத பொழுதொன்றில் அவரையோ, அவரைச் சார்ந்தவரையோ அல்லது வெளிநபர் ஒருவரையோ தாக்கக் கூடும் என ஒழுங்கின்மைக் கோட்பாடு மேலும் கூறுகின்றது (ஆத்ரேயா, 2019).

மனிதனது சிறு சிறு தவறுகளும் பெரிய பெரிய தவறுகளும் சூழலை பாதிக்கின்றன. சூழலை முழு நிறைவோடும் மனிதனுக்கு வசப்படும் படியும் அல்லாஹ் படைத்துக் கொடுத்தான். மனிதனதும் அவனது எல்லை மீறிய செயற்பாடுகளுமே சூழலை மாசுபடுத்தின என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும்.

மக்களின் கரங்களின் சம்பாத்தியம் காரணமாக பூமியிலும், கடலிலும் நாசம் தோன்றி விட்டது (அல்குர்ஆன், 30: 41).

உலக நிகழ்வுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாக இருப்பதன் காரணமாக மனிதன் செய்யும் செயல்கள் சூழலை நாசமடையச் செய்கின்றன என்று இக்குர்ஆனிய வசனத்திற்கு பொருள் கொள்ளலாம்.

சிறியதோ, பெரியதோ அளவுகள் எப்போதும் முக்கியம் பெறுவதில்லை. சமூகத்திற்கு நலன் பயக்கும் விடயம் ஒன்று இருக்குமானால் தயக்கமின்றி அச்செயலைச் செய்யலாம். என்றோ ஒரு நாள் அச்செயல் உலகை ஒளியூட்டும். சிறியதொரு மரம் நடுவதன் பயன்கூட இன்று உணரப்படாது போயினும் எதிர்காலத்தில் அதன் பயன் உலகத்தையே உய்விக்கும் தன்மையைப் பெறும் என்பது குழப்பவாதத்தின் கருத்தாகும் (ஆத்ரேயா, 2019).

பின்வரும் இரு முஹம்மத் (ஸல்) அவர்களின் போதனை இக்கருத்தைக் காட்டுகின்றன.

01. ‘‘உங்களில் ஒருவரின் கையில் மரச்செடியொன்று இருக்கும் நிலையில் மறுமை வந்துவிட்டது என்றிருந்தாலும் அவர் அச்செடியை நாட்டிவிடட்டும் (ஆதாரம்: அஹமத்).

02. எந்தவொரு முஸ்லிமாவது ஒரு மரத்தை நட்டால் அல்லது ஒரு பயிரை விளைவித்தால் அதிலிருந்து ஒரு மனிதனோ அல்லது பறவையோ அல்லது விலங்கோ உண்ணும் காலமெல்லாம் அவருக்கு அது தர்மமாக அமையும் (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்).

இங்கு முதலாவது நபியவர்களது (ஸல்) கூற்று உலகம் அழியும் தறுவாயில் கூட வணக்கஸ்தலத்தை நோக்கி ஓடும்படி கூறவில்லை. கையில் ஒரு மரமிருந்தால் அதனை நட்டிவிடு என்றே கூறுகின்றது. காரணம் சிறிய மரமாக இருந்தாலும் அதன் விளைவு பெரியது, பாரியது. ஒழுங்கின்மைக் கோட்பாடும் அதனையே குறிப்பிடுகின்றது.

நாட்டப்பட்ட மரம் காலங்களைத் தாண்டியும் பல்வேறு நன்மைகளை கொடுப்பதனால் மரத்தை நாட்டிய மனிதனுக்கு காலங்களைத் தாண்டியும் நன்மை கிடைக்கின்றது என நபியவர்களது இரண்டாவது கூற்று விளக்கின்றது.

**முடிவுரை**

உலக நிகழ்வுகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தவை மற்றும் தக்க நேரத்தில் இடம்பெறும் ஒரு சிறிய நிகழ்வு பாரிய பல மாற்றங்களை கொண்டுவரும் ஆற்றல் மிக்கது என்பது ஒழுங்கின்மைக் கோட்பாட்டின் சாரமகும். இஸ்லாமும் இக்கருத்தை ஏற்று, சூழலை எதிரியாக பார்க்காமல் சகோதரனாகப் பார்க்கும் படியும் சூழலை துஷ்பிரயோகம் செய்யும் செயலில் ஈடுபடாமல் வளப்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபடும்படியும் கூறுகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


- அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்.* ஒலுவில்: சமூகவிஞ்ஞானங்கள் துறை, இலங்கைதென்கிழக்குப் பல்களைக்கழகம்
- அப்துல் றகுமான். (1995). *முட்டை வாசிகள்.* சென்னை: கவிக்கோ பதிப்பகம்.
- அக்ரம். (2018, ஏப்ரல் 11). சூழலைப் பாதுகாத்தல்- இஸ்லாமிய ஷரீஆவின் மகாஸிதுகளில் ஒன்று Retrieved from https://salamah.lk/%E0%AE%9A%E0%AF%82%E0%AE%B4%E0%AE%B2%E0%AF%88%E0%AE%AA%E0%AF%8D-%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%A4%E0%AF%81%E0%AE%95%E0%AE%BE%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B2%E0%AF%8D-%E0%AE%87%E0%AE%B8%E0%AF%8D/

- அப்துல் றஹீம். (2013, மார்ச்,01). சூழலைப் பாணதகாத்தல் தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டம். Retrieved from http://archives.thinakaran.lk/2013/03/01/?fn=r1303012.
- அப்துல் றஹீம். (2013, மார்ச்,15). சூழலைப் பாணதகாத்தல் தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டம். Retrieved from http://archives.thinakaran.lk/2013/03/15/?fn=r1303154.
- அப்துல் றஹீம். (2013, மார்ச்,22). சூழலைப் பாணதகாத்தல் தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டம். Retrieved from http://archives.thinakaran.lk/2013/03/22/?fn=r1303225.
- ஆத்ரேயா. (2019, ஏப்ரல், 01). ஒழுங்கின்மைக் கோட்பாடு. Retrieved from https://roar.media/tamil/main/miscellaneous/chaos-theory-butterfly-effect/
- சுக்ரி, எம். ஏ. எம். (1995). இஸ்லாமும் சூழலியலும். இஸ்லாமிய சிந்தனை, 17(3), 10 – 17
- சிவம். (2006, ஏப்ரல், 13). ஒழுங்கின்மைச் சித்தாந்தம் (பாகம் - 1). Retrieved from http://web.archive.org/web/20060427220227/http://agarathai.blogspot.com/2006/04/01-1.html.
- Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge:Polity Press.
- Haralambos and Holborn, (2000). *Sociology: Themes and Perspectives.* London: Harper Collins Publishers Limited.
- Rao Sankar, (2007). *Sociology*: *Primary Principles.* New Delhi: S.Chand and Commpany Ltd.